பெ.செ.எண்.930

செ.இ.ம.செய்தி

நாள்: 4.12.2009

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முன்னோடியாக தமிழகத்தில் உள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலனுக்காக ஒரு சீரிய திட்டத்தை தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் –2006 செயல்படுத்தி அதற்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் வாரிய தலைவராக என்னை நியமித்து 10.6.2009 அன்று பொறுப்பேற்று முதற் கட்டமாக 10.7.09 அன்று அனைத்து தனிதுணை ஆட்சியர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஆய்வுக்கூட்டம் என் தலைமையில் சென்னையில் நடத்தி இதில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்துவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இது நாள் வரை 16 மாவட்டங்களில் திட்டம் செயல்பாடு தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 10.6.2009 முதல் 31.10.2009 வரை இந்த நான்கு மாதங்களில் மட்டும் இந்த வாரியத்தின் மூலமாக சென்னையைத் தவிர்த்து பிற மாவட்டங்களில் 40,020 பயனாளிகளுக்கு ரூ. 51,97,48,745/- கீழ்க்கண்டவாறு பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---:|---:|
| உறுப்பினர் திருமணம் | 1,243 | 43,78,500 |
| உறுப்பினர்களின் குழந்தைகளின் திருமணம் | 15,728 | 6,43,35,000 |
| முதியோர் உதவித் தொகை | 3,472 | 12,40,88,575 |
| இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 18,703 | 23,43,26,170 |
| விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 874 | 9,26,20,500 |
| மொத்தம் | 40,020 | 51,97,48,745 |

தற்போது மீண்டும் 4.12.09 இன்று அனைத்து தனித்துணை ஆட்சியர்கள் (ச.பா.தி) கலந்து கொண்ட இரண்டாவது ஆய்வு கூட்டம் வாரிய தலைவர் தலைமையில் மற்றும் வாரியத்தின் இணை தலைவர், முதன்மை செயலர், வருவாய்த்துறை, முதன்மை செயலர் மற்றும் ஆணையர் வருவாய் நிர்வாகத்துறை, மற்றும் உறுப்பினர் செயலர் இயக்குநர், நிலச்சீர்திருத்தத்துறை முன்னிலையில் சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்றது. இந்த ஆய்வு கூட்டத்தில் இத்திட்டத்தின் செயல்பாடு மாவட்டங்களில் மேலும் சிறப்பாக நடைபெற ஆலோசனை மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் இத்திட்டத்தில் இது நாள் வரை (31.10.09) வரை 75,68,219 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு 1,72,81,268 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.359 கோடி 4,55,536 பயனாளிகளுக்கு திட்ட உதவித் தொகை இத்திட்டத்தின் கீழ்க்கண்டவாறு பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டதாக தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் கே.பி. இராமலிங்கம் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| உறுப்பினர் திருமணம் | 17,506 | 6,64,93,000 |
| உறுப்பினர்களின் குழந்தைகளின் திருமணம் | 1,20,508 | 48,81,36,500 |
| முதியோர் உதவித் தொகை | 1,17,553 | 73,15,45,695 |
| இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 1,11,923 | 137,17,34,750 |
| விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 4,854 | 47,43,45,000 |
| மகப்பேறு | 73,086 | 42,12,18,000 |
| கல்வி உதவி | 10,106 | 3,41,66,850 |
| மொத்தம் | 4,55,536 | 358,76,39,795 |

இந்த ஆய்வில் கீழ்க்கண்ட நிகழ்வுகள் குறித்து மாவட்ட வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேலும் சிறப்பாக பணிகள் நடைபெற அறிவுரைகள் வழங்கப்பட்டது.

- திட்டத்தின் உறுப்பினர்கள் பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டைகள் வழங்குவதில் முன்னேற்றம்
- இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு மற்றும் பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கிய செலவின பணிமுன்னேற்றம்
- இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் (2009–2010) நிவாரணம் கோரி நிலுவையாக உள்ள மனுக்கள் மற்றும் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு
- மாநிலக் கணக்காயர் தணிக்கை மற்றும் உட்தணிக்கை
- இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதில் மாவட்டங்களில் உள்ள இடர்பாடுகள் மற்றும் அதனை களைவதற்கான ஆலோசனைகள்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9